அரசு என்ன நடவடிக்கை எடுத்தது? இனிமேலாவது அம்மாதிரி நடக்காமலிருக்க அரசு என்ன நடவடிக்கை எடுக்க உத்தேசித்து இருக்கிறது?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவரை எச்சரிக்கும் வகையில் அவர் மாற்றப்பட்டிருக்கிறார். அவர் செய்த செயலும் கண்டிக்கப் பட்டிருக்கிறது.

திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, காவல் துறையில் இருக்கும்படியான இப்படிப்பட்ட அதிகாரிகள் பஸ்ஸிலே தங்களுக்கு டிக்கட் கொடுக்கவில்லை என்பதற்காகக்கூட தொழிலாளர்களை அச்சுறுத்துவதாகப் பல செய்திகள் வந்துகொண்டே இருக்கின்றன. இது சம்பந்தமாக ஏதாவது உறுதியான உத்தரவைப் பிறப்பிக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அப்படி ஏதாவதொரு தெளிவான விஷயத்தைப்பற்றி மாண்புமிகு உறுப்பினரவர்கள் எழுதி யனுப்புவாரானால் அதுபற்றிக் கவனிக்கப்படும்.

திரு. கே. விநயகம்: அங்கு வாயிலில் இருந்த சிம்ப்ஸன் கம்பெனி உத்தியோகஸ்தருக்கும் நம்முடைய காவல்துறையில் இருக்கும் சப்-இன்ஸ்பெக்டருக்கும் ஏற்கெனவே ஏதாவது விரோதம் இருந்ததா? அந்தச் சம்பவம் எப்படி நடந்தது? கைகலப்பிற்கு என்ன காரணம்? அந்த சப்-இன்ஸ்பெக்டரை வேறு இடத்திற்கு மாற்றுவது அவ்வளவு போதிய அளவுக்குக் கொடுக்கப் படுகிற தண்டனை அல்ல என்று யான் கருதுகிறேன். இதுமாதிரியான ஒரு நிகழ்ச்சி ஏதோ ஒரு நாள் உங்கள் கவனத்திற்கும் எங்கள் கவனத்திற்கும் வருகிறது. ஆனால், இதுபோல் எங்கு பார்த்தாலும் நடப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: அவர் மீது சென்ஷூரே நிறைவேற்றப்பட்டிருக்கிறது. தண்டனை போதுமானதல்ல என்று 'யான்' கருதுவதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. விநயகம் அவர்கள் குறிப்பிட்டார்கள். இது போதுமானது என்று யாம் கருதுகிறோம். (சிரிப்பு)

ஆய்வுக்கூட தொழில்நுட்பப் பணியாளர்கள் ஊதியம்

*210 வினா—திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நமது மாநில அரசைச் சேர்ந்த பெரிய மருத்துவமனைகளிலுள்ள லேபரட்டரி டெக்னிஷியன்களுக்கும் (Laboratory Technicians) மத்திய அரசைச் சேர்ந்த மருத்துவமனைகளிலுள்ள லேபரட்டரி டெக்னிஷியன்களுக்கும் ஊதியத்தில் வேறுபாடு இருப்பது அரசினருக்குத் தெரியுமா?

(இ) இந்த ஊதிய வேறுபாட்டைப் போக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும் உத்தேசம் உண்டா?

1970 மார்ச் 5]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.
(இ) இல்லை.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், மாநில அரசைச் சேர்ந்த மருத்துவமனைகளில் பணிபுரியக்கூடிய இந்த லாபரடரி டெக்னிஷியன்களுக்கு எந்தவிதமான ப்ரமோஷனும் கிடையாது; சம்பள உயர்வும் கிடையாது. மத்திய அரசு மருத்துவ மனைகளில் பணிபுரியக்கூடியவர்களுடைய சம்பளத்திற்கும் இவர்களுடைய சம்பளத்திற்கும் 50 ரூபாய் வித்தியாசம் இருக்கிறது. உத்தியோகத்திலே உயர்வும் கிடையாது. இந்த நிலைமையில் மத்திய அரசு லாபரடரி டெக்னிஷியன்களுக்குக் கொடுக்கக்கூடிய சம்பளத்தின் அடிப்படையில் மாநில அரசு ஊழியர்களுக்கும் அந்த அளவுக்கு சம்பளத்தை உயர்த்திக் கொடுப்பதற்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இந்த ஒரு துறையில் மட்டுமல்லாமல் பல்வேறு துறைகளில் மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் வேறுபட்டிருக்கின்றன. எல்லா சம்பள விகிதங்களையும் ஒரே அளவுக்குக் கொண்டுவரும் அத்தகைய முயற்சியும் இப்பொழுது எடுக்கப்படவில்லை. லாபரடரி டெக்னிஷியன்களுடைய சம்பளம் உயர்த்தப்பட வேண்டுமா வேண்டாமா என்பதைப்பற்றிப் பரிசீலிக்க சம்பளக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. சம்பளக் குழு ஆராய்ந்து எந்த அளவு இவர்களுடைய சம்பளத்தை உயர்த்துவது இப்பொழுதிருக்கும் சூழ்நிலையில் என்று கண்டறிந்து அவர்கள் சிபார்சின் பேரில் நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. கொளத்தூர் கோதண்டம்: மாநில அரசில் வேலை செய்கிற லாபாடரி டெனிஷியன்களுக்கும் மத்திய அரசில் வேலை செய்பவர்களுக்கும் இருக்கின்ற சம்பள விகிதாசாரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இவர்களில் கிரேடு-1, கிரேடு-2 என்று இரு பிரிவுகள் இருக்கின்றன. மாநில அரசில் வேலை செய்பவர்களுக்கு—முதல் கிரேடில் உள்ளவர்களுக்கு ரூ. 100—5—200 என்ற அளவுக்கும், மத்திய அரசில் வேலை செய்பவர்களுக்கு ரூ. 150—5—160—8—240 என்ற அளவுக்கும் சம்பள விகிதம் இருக்கிறது. இரண்டாம் கிரேடில் உள்ளவர்களுக்கு மாநில அரசைச் சார்ந்தவர்களுக்கு ரூ. 80—2—100 என்ற அளவுக்கும், மத்திய அரசைச் சார்ந்தவர்களுக்கு ரூ. 130—5—160—200 என்ற அளவுக்கும் சம்பள விகிதம் இருக்கிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : சார், பல்வேறு துறைகளில் இருக்கிறார்கள் என்றாலும், இந்தத் துறையில் பணிபுரியக்கூடியவர்களைப்போல் ப்ரொமோஷன் இல்லாதவர்கள் வேறு துறைகளில் கிடையாது. மற்றவர்களுக்கெல்லாம் அப்போதைக்கப்போது ப்ரொமோஷன் இருக்கிறது. இவர்களுக்கு ப்ரொமோஷன் என்பதே கிடையாது. ஆகவே, மத்திய அரசில் உள்ளவர்களுக்கு

இருக்கும் சம்பள விகிதத்தின் அடிப்படையில் இவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்துவதற்கு இரண்டாவது பே கமிஷனுக்கு அமைச்சரவர்கள் உறுதியாகச் சிபார்சு செய்வார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, இரண்டாவது சம்பளக் கமிஷனிடத்தில் இந்தத் துறையைச் சேர்ந்தவர்களும் தங்களுடைய கோரிக்கைகளை வைத்து விண்ணப்பித்துக் கொள்ளுவதற்கு வாய்ப்பும் வழியும் இருக்கிறது. அரசாங்கத் துறையிலிருந்தும் இதைச்சம்பளக் கமிஷனுடைய கவனத்திற்குக் கொண்டுவருவதற்கு வழிவகை இருக்குமானால் அது பற்றிய நடவடிக்கையை அரசு எடுத்துக் கொள்ளும்.

திரு. ஆர். கருப்பையா : மத்திய அரசு ஊழியர்களுக்கும் மாநில அரசு ஊழியர்களுக்கும் சம்பள விகிதங்கள் ஒரே அடிப்படையில் இல்லையென்றாலும், வேறுபாடு அதிகமாக இருப்பதையாவது குறைத்துச் சீர்படுத்த அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதைத்தான் இரண்டாவது சம்பளக் கமிஷன் ஆராயும் என்று சொன்னேன்.

Government Arts College at Ponneri

* 211 *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Health be pleased to state—

(*a*) whether this Government has changed the medium of instruction in the Loganathan Narayanaswamy Government Arts College, Ponneri into Tamil from English;

(*b*) if so, whether any alternative arrangement has been made for the minority Telugu speaking people of the Taluk, as it has been declared as a bilingual area by a Government Order a few years ago; and

(*c*) whether the Government propose to have at least one section in English for the benefit of the Telugu speaking people and such of those who desire to join in the English medium?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தாய்மொழி தமிழாயிராத மாணவர்கள் மட்டுமே ஆங்கிலப் பிரிவில் சேர்த்துக் கொள்ளப்படவேண்டுமென்கிற நிபந்தனைக்குட்பட்டு, கல்லூரிப் புகுமுக வகுப்பில் கலைப் பாடங்களில் ஆங்கிலப் பயிற்றுமொழிப் பிரிவு ஒன்றை வைத்துக் கொள்ள அரசு இக்கல்லூரிக்கு அனுமதி வழங்கியுள்ளது.

திரு. கே. விநாயகம் : அப்படி அனுமதி தந்திருந்தால், தமிழை தாய் மொழியாகக் கொள்ளாத மாணவர்கள் எத்தனை பேர் இப்பொழுது அந்த வகுப்பில் சேர்ந்திருக்கிறார்கள்?